**தலைப்பு 325 இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 325 – இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை

அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாடுகளில் இருந்து விலகிய சந்தர்ப்பம்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 பெப்பவரி 18 திகதிய இந்த திருத்திய அரச கணக்குத் திணைக்கள வழிகாட்டல் 06/2024 இன் படி நிதிக்கூற்றுக்களுக்குக்கான இருப்புக்களின் கீழ் அறிக்கையிடும் அடிப்படை மற்றும் நிதி நிலைமைக்கூற்றில் படிவம்சார் திருத்தங்கள் மேற்கொண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு தொடர்பாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | அரச கணக்கு வழிகாட்டல் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 16 திகதி அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் 06 பந்தியின் படி ஏசீஏ 2(iii) படிவம் தயாரிக்கும் போது ஆரம்ப செலவுகள் மற்றும் திருத்தி செலவுகள் இடையே வித்தியாசங்கள் விளக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஏசீஏ 2(iii) | சரியான முறையில் தயாரிக்கப்பட்ட ஏசீஏ 2(iii) படிவத்தில் தேவையான நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

படிவத்தில் திருத்திய செலவு மதிப்பீடு என உள்ளவாறான செலவுகள் பதியப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்ததில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 4,000,000 தொகைக்கான எரிபொருள் மதிப்பீட்டுச் செலவு போதியளவாக காணப்படாமையால் மீளளிப்புச் செய்யாமல் கடற்படையிடம் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி, திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட கப்பல்கள், வள்ளங்கள் உட்பட வாகனங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களினால் செலவிடப்பட்ட எரிபொருள் கிரயம் ரூபா 373,986,555 தொகையாக காணப்பட்ட போதிலும், ஏசீஏ-2 படிவங்களில் 1202 செலவு விடயத்தின் கீழ் எரிபொருள் செலவு ரூபா 3,811,696 தொகை மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 377,798,251 தொகையாகிய சரியான எரிபொருள் செலவு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 3,811,696 தொகை ஏற்பாடுகள் செலவிடப்பட்டிருந்ததுடன், அது திணைக்களத்தின் வாகனங்களுக்காக தேவையான உராய்வு எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள், கப்பல்கள் மற்றும் படகுகளுக்கு தேவையான எரிபொருள் இலங்கை கடற்படையில் இருந்து மீளளிப்பு செய்யாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அடுத்த ஆண்டுகளில் எரிபொருளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நிதியமைச்சினை அறிவுறுத்தி தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கும் அதன்படி, கடைபிடிக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கை தொடர்பாக தேவையான அறிவுரைகள் விரைவாக வழங்குமாறு வேண்டி பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் என 2025 ஆண்டின் தேசிய பாதீட்டு திணைக்களத்திலிருந்து ஏற்பாடுகள் ஒதுக்கும் போது | திணைக்களத்திற்குரிய சரியான எரிபொருள் செலவு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்க்காக தேவையான பெறுமதி வெவ்வேறாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என., நிதிக்கூற்றுக்களில் உரிய முறையில் சித்தரித்துக் காட்ட இயலுமை ஒன்று காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**(ஆ) ஆதனங்கள், பொறிததொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிததொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்வதில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2024 ஜனவரி 19 திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 02/2024 மற்றும் 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் பந்தி 8.2 இன் பிரகாரம் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாத சொத்துக்கள் காணப்படின் அவற்றை உரிய முறையில் இனங்கண்டு கிரயத்தில் அல்லது கிரயத்தை இனங்காண முடியாத சந்தர்ப்பத்தில் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறாயினும், இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வெளிநாட்டு நன்கொடைகளாக கிடைத்திருந்த பெறுமதி ரூபா 45,391,232 தொகை மாத்திரம் நிதி அல்லாத சொத்துக்கள் ஏசீஏ-6 படிவத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் ரூபா 38,996,346 தொகை குறைவாக நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2024 நன்கொடையாக கிடைத்திருந்த விடயங்களை கணக்கீடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தவுடன் அந்த விடயங்களை கணக்கீடு செய்வதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 2025 இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அவ் விடயங்களை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வழிகாட்டலின் பிரகாரம் நிதிக் காலப் பகுதியின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற அனைத்து நிதியல்லாத சொத்துக்களும் உரிய முறையில் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் ஏசீஏ – 06 படிவத்தின் படி நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 2,591,869,939 தொகையாக காணப்பட்ட போதிலும், 2023 | நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியிடையே வித்தியாசத்திற்கான காரணமாக இருந்தது வெளிநாட்டு நன்கொடைகள் விடயத்தில் 2024 | ரூபா 44,195,986 தொகையின் வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரியான பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் ஏசீஏ – 06 படிவத்தின் படி நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 2,547,673,953 தொகையாகும். அதன்படி, ரூபா 44,195,986 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 2023 ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள், போக்குவரத்து உபகரணங்கள் (தொகுதி இலக்கம் 2.1) வகைப்படுத்தலின் வேறாக உட்படுத்தப்பட்டிருக்காத ரூபா 26,773,159 தொகை கிரயத்தையுடைய வாகனம் 2024 ஆண்டின் ஆரமப மீதியில் உற்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (தொகுதி 2.2) வகைப்படுத்தலின் 07 விடயங்களின் ஆரம்ப மீதிகள் ரூபா 17,422,828 இனால் திருத்தப்பட்டிருத்தல் மேற்கூறிய வித்தியாசத்திற்கான காரணமாக காணப்பட்ட போதிலும், அந்த திருத்தங்கள் தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஆண்டின் போது கிடைத்திருந்த விடயங்களை கணக்கீடு செய்வதற்காக CIGAS முறைமைக்கு உட்படுத்தும் போது அந்தப் பெறுமதிகள் தவறுதலாக ஆரம்ப மீதியுடன் கூட்டப்பட்டிருந்ததென காட்ட முடியும் எனவும், அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வெளிப்படுத்த வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் (ஏசீஏ-06) அட்டவணையின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான கப்பல்கள், படகுகள் மற்றும் வள்ளங்களின் பெறுமதி ரூபா 133,576,670 தொகையாக காணப்பட்ட போதிலும், 2025 ஏப்ரல் 09 திகதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் டீஜீசீஜீ/எல்ஓஜீ/10(ஆ) கொண்ட கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான 30 கப்பல்கள், வள்ளங்கள் மற்றும் படகுகளின் பெறுமதி ரூபா 3,429,633,315 தொகையாக காணப்பட்டது. அதன்படி, 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சேமம் ரூபா 3,296,056,645 தொகை குறைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற கப்பல்கள் மற்றும் படகுகள், கடற்படை மற்றும் வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைத்திருந்தன. இந்த படகுகளில் CG 61(ஜயஸாகர) மற்றும் CG 106(RHIB) படகுகள் மாத்திரம் (ஏசீஏ-06) அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய படகுகளின் பெறுமதி உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதன் காரணமாக கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான தற்போது காணப்படும் 31 படகுகள் மற்றும் கப்பல்கள் பதிவேட்டின் படி மேற்கூறிய இரண்டு படகுகளும் இன்றி மீதியான 29 படகுகளின் பெறுமதியை விரைவாக இந்த அட்டவணையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு | திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற CG 60 (சுரக்ஷா) கப்பல் 2017.07.14 திகதி | உரிய முறையில் பெறுமதி மதிப்பீடு செய்து |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான ஶ்ரீலங்வேஆநெள சுரக்ஷா (CG 60) கப்பலின் கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்திற்கு நன்கொடையொன்றாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த கப்பலுக்காக முறையான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியொன்று இதுவரை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பெறுமதி காட்டப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் (ஏசீஏ-06) அட்டவணையின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி ரூபா 89,258,076 தொகை எனினும், 2025 ஏப்ரல் 10 திகதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டீஜீசீஜீ/எல்ஓஜீ/10(ஆ) இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 75 வாகனங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 81,788,958 தொகையாக காணப்பட்டது. திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 21,486,533 இற்கான பெறுமதியுடைய 03 ATV இயந்திரங்கள் காணப்படுகின்றதெனவும், அதன்படி, அந்த 75 வாகனங்களில் மற்றும் 03 ATV இயந்திரங்களின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா 103,275,491 தொகை மாத்திரம் காணப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டமையால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சேமம் ரூபா 14,017,415 தொகையினால் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | திணைக்களதிற்கு சொந்தமான 03 ATV (All-Terrain Vehicle) வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ய முடியாது எனவும், கொம்ட்ரோலர் ஜனரல் அலுவலகத்தில் (NFAMS முறைமையில்) கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனம் ஒன்றென குறிப்பிட்ட வாகனம் உட்படுத்தப்பட்டிருந்ததெனவும், அவற்றின் பெறுமதி ரூபா 21,486,533 தொகையாகும். மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் (ஏசீஏ-06) திணைக்களத்திற்கு சொந்தமான மீதியான 53 வாகனங்களின் பெறுமதி சேர்க்கப்பட வேண்டியதுடன், மோட்டார் வாகன தொகுதிக்கு உட்படாத உதிரிப் பாகங்கள், பெட்டரி மற்றும் துவிச்சக்கர வண்டி மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் (ஏசீஏ-06) அட்டவணையில் இருந்து அகற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டதுடன், இந்த பெறுமதியில் முரண்பாட்டுத் தன்மையை தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

**2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேறிய ஏற்பாடுகள் ரூபா 10,000,000 தொகைக்கான 2401-17 செலவு விடயத்தின் கீழ் பதவியணிப் பயிற்சிகளுக்காக (JICA) ஒதுக்கப்பட்டிருந்த அனைத்து ஏற்பாடுகளும் வருட இறுதியளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | 2101-17 செலவுத் தலைப்பின் கீழ் பதவியணி பயற்சிகள் (JICA) இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகை ஏற்பாடுகள் பேரளவில் மாத்திரம் (கணக்கீடு செய்வதற்காக) இந்த திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தமையால் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் விடயங்களை அறிவித்த பின்னர் இந்த ஏற்பாடுகள் தொடர்பாக கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03 மற்றும் வழிகாட்டல் இலக்கம் 12 இன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அந்த நிறுவனத்திற்கு சாட்டப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாக கொண்ட முக்கியத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட தொழிற்பாடுகள் செயற்படுத்தும் கால சட்டகம், எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் விளைவுகளும் அதற்காக பொறுப்புச் செல்ல வேண்டிய தரப்பினர் உட்படுத்த வேண்டியிருந்த போதிலும், தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பிரிவிற்கும் சாட்டப்பட்டுள்ள அனைத்துப் | 2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருந்ததுடன், அதன்படி, 2025 ஏப்ரல் 08 திகதி பாதுகாப்பு அமைச்சின் 2025 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பித்தல் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடிலில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்து திணைக்களங்களுக்கும் உரிய குறைபாடுகள் விரிவாக கலந்துரையாடப்பட்டு அந்த குறைபாடுகள் 2025 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சரி செய்யப்பட வேண்டிய முறை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2025 ஏப்ரல் மாதம் 10 திகதி மேற்கூறிய | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் அடிப்படையாகக் கொண்டு முக்கியத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட தொழிற்பாடுகள் செயற்படுத்தும் காலச் சட்டகம் எதிர் பார்க்கும் வெளியீடு மற்றும் விளைவுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர் உட்பட செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களின் பரப்பு மற்றும் அதன் கீழுள்ள செயற்பாடுகளை அறுதியாக இனங்கண்டிருக்காததுடன், வருடாந்த செயற்பாடுகள் செயற்படுகின்ற முறை மற்றும் எதிர்பார்க்கின்ற நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டு 2025 ஆண்டில் இந்த திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**4.2 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய ஏதேனும் அறுதியாக குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய அனைத்து கணக்காய்வு செய்யக்கூடிய நிறுவனங்கள் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றினுள் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 ஏப்ரல் அளவில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 வருடாந்த செயலாற்றல் அறிக்கை சிங்கள மொழி மூலம் தயாரிக்கப்பட்டு 2025 மார்ச் 27 திகதி பாதுகாப்பு அமைச்சின் அவதானிப்புக்களுக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அவதானிப்புக்கள் கிடைத்த பின்னர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபேர்ப்பு செய்து மீண்டும் அறிக்கை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்பு அமைச்சின் அவதானிப்புக்கள் கிடைத்த பின்னர் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்கறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கையும் உட்பட இறுதிச் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைவு செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான 06 காணித் துண்டுகள் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உரித்தாக்குவதற்கு முடியாமல் இருந்தது என அவதானிக்கப்பட்டது. | வெள்ளவத்த (வருண நிறுவனம் அமைந்துள்ள காணி), பலபிடிய உயிர் பாதுகாப்பு பயிற்சிப் பாடசாலை, பானந்துறை மற்றும் தொடுவாவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், திக்ஒவிட (துறைமுகம்) கடைப்படைக்கு | உரித்தாக்கிக் கொடுப்பதற்கு இணக்கம் கிடைத்துள்ள காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு விரைவாக உரித்தாக்கலை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரித்தான காணி மற்றும் கொட்பே காணிகளை உரித்தாக்குவதற்கு இணக்கப்பாடு கிடைத்திருக்கவில்லை. | |
| (இ) | மீளாய்வாண்டின் போது கைப்பற்றப்பட்டிருந்த போதைப்பொருள் இடையே KENNDU LEAVES எனும் 15,067 கி.கி போதைப்பொருள் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கை சுங்கத்திற்கும் ஏனைய போதைப் பொருள் அனைத்தும் இலங்கை பொலிஸ் இற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு கைப்பற்றப்பட்டிருந்த போதைப் பொருட்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக CG 003 படிவத்தின் மூலம் இலங்கை சுங்கத்திற்கு மற்றும் இலங்கை பொலிஸ் இற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் அதன் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சுக்கும் மற்றும் தேசிய கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் வழங்கப்படுவதுடன், அதன் தொடர் சட்ட அலுவல்கள் அந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுவதுடன், பின்தொடர் நடவடிக்கை அலுவல்கள் கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதில்லை. | கைப்பற்றப்படுகின்ற போதைப் பொருள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.3 பணம் விடுவிக்கப்ட்ட போதிலும் முன்னேற்றமொன்று பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 98 மில்லியனிற்கான மதிப்பீட்டுச் செலவின் கீழ் கடலோரப் பாதுகாப்பு வருண நிறுவனத்திற்காக வதிவிடம், நிருவாக வசதிகளுடனான நான்கு மாடிக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட திகதி கணக்காய்விற்கு வெளிப்படுத்துவதற்கு முடியாதுள்ளதுடன், 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது இதற்காக முறையே ரூபா 10,000,000 தொகை மற்றும் ரூபா 35,000,000 தொகை வீதம் மொத்தம் ரூபா 45,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,911,478 தொகை மற்றும் ரூபா 13,710,142 தொகை ஆக மொத்தம் ரூபா 18,621,620 தொகை | இகபா வருண நிறுவனத்தின் நான்கு மாடிக் கட்டிடத்திற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. அப்போது இந்த நிலத்தின் உரிமை இகபாதி இற்கு உரித்தாகி இருந்ததுடன், அதன் காரணமாக அதற்காக ரூபா 18,621,620 தொகை பொருட்களுக்கான கட்டளை இடப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் இந்த நிலத்தின் உரிமை தொடர்பாக சிக்கல் தன்மையொன்று ஏற்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாமல் போனதுடன், அதன் காரணமாக செயற்திட்டத்தின் முன்னேற்றம் சூனியமாக இருந்தது. | காணியின் உரிமை தீர்க்கப்படாமல் நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல் மற்றும் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படக்கூடாது எனவும், கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவொன்று மேற்கொண்டிருந்தது. அவ்வாறாயினும் இந்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் சூனிய சதவீதத்தை கொண்டிருந்தது. | | |

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான கப்பல்கள் மற்றும் படகுகள் இடையே 06 மாதங்களை விட கூடிய காலம் செயற்படாமல் காணப்பட்ட 05 படகுகள் காணப்பட்டன. அந்த படகுகளை கொள்வனவு செய்த பின்னர் செயற்படாத நிலைமை ஏற்படும் வரை பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்ட 04 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான வீச்சில் காணப்பட்டதுடன், அந்த அனைத்து படகுகளும் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டு 1 ½ வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான 05 படகுகளின் அனைத்து விபரங்களும் சரியானவையாகும். அந்த 05 படகுகளில் (CG 103, CG 203, CG 204, CG 403 மற்றும் CG 405) 02 படகுகள் (CG 203, CG 204) திருத்த வேலையின் பின்னர் செயற்படு நிலைமைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அவற்றில் CG 403 படகின் திருத்த வேலை அலுவல்களுக்காக பாரிய தொகையொன்று செலவிட நேரிடுவதால் அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | செயற்படாமல் காணப்படுகின்ற இரண்டு படகுகளை விரைவாக திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பொருத்தமான நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ள படகிற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான CG 408 கடற்படைக் படகு 03 வருடங்களும் 04 மாதங்கள் காலப் பகுதி பாவனைக்கு உதவாத நிலைமையில் காணப்பட்டது. | திணைக்களத்திற்கு சொந்தமான சீஜீ 408 படகு அதன் திருத்த வேலைக்காக பாரிய தொகையொன்று செலவிட நேரிடுவதனால், அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் படி டென்டர் சபையொன்றூடாக விற்பனை செய்வதற்காக 2025 மார்ச் 14 திகதி கூறுவிலை அழைத்தல் திறக்கப்பட்ட போதிலும், அதற்காக எவரும் கூறுவிலை சமர்ப்பித்திருக்கவில்லை. அதன் காரணமாக மீண்டும் கூறுவிலை அழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, CG 408 இலக்கம் கொண்ட படகு கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் அகற்றுவதற்கு எதிர்காலத்தில் | CG 408 படகினை அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2024 திசெம்பர் 31 திகதியளவில் WP KG 5476 கொண்ட 2008 ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கப் வண்டி மற்றும் WP PF 5410 இலக்கம் கொண்ட 2014 ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கப் வண்டி ஓட்ட நிலையில் காணப்படாத போதிலும், உரிமையை உரித்தாக்கிக்கொள்வதற்கு மற்றும் திருத்த வேலை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | WP KG 5476 மற்றும் WP PF 5410 இலக்கம் கொண்ட வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் மூலம் கடலோரப்ப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2024 திசெம்பர் 24 திகதி வழங்கப்பட்டதுடன், அந்த வாகனங்களை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு தேவையான ஆவணங்களுடன் தேவையான அங்கீகாரம் 2025 ஜனவரி 23 திகதி எம்ஓடீ/ஏடீஎம்/டீஆர்ஏ/01/02/12 இலக்கம் கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்கள் நீண்ட காலமாக ஓட்டத்திற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டமையால் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் குறிப்பிட்ட இரண்டு வாகனங்களும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்த பின்னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப் பிரகாரம் உரிமையை உரித்தாக்கல் மற்றும் விரைவாக திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.5 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 4.2.1 (ஆ) மற்றும் (இ) பிரகாரம் குறைந்தளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்ப்பு பெறுகை அலுவலகள் பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டியதுடன், தொடர்ந்து வரும் ஆண்டிற்காக பெறுகை அலுவல்கள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டம் 2024 ஒக்தோபர் 31 வரை | பெறுகைத் திட்டம் 2024 ஒக்தோபர் 31 திகதி வரை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த காரணம் கொள்வனவு கோப்பு ஆரம்பிக்கப்பட்டு பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்படும் செய்முறையின் போது ஏற்படுகின்ற பல்வேறு சிக்கல்களில் இருந்து தவிர்ந்து கொள்ளல் மாத்திரம் அன்றி திசெம்பர் 15 திகதி அளவில் தீர்க்கப்படாத அனைத்து பில் பத்திரங்களும் தீர்க்கும் செய்முறையை முறைப் பிரகாரம் மேற்கொள்ளும் குறிக்கோளுடன், | பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது வழிகாட்டலுக்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆகஸ்ட 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 மற்றும் வழிகாட்டல் இலக்கம் 13 இன் பிரகாரம் மற்றும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 4.2.2 (அ) மற்றும் (ஆ) பிரகாரம் பெறுகை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து முடிவுறுத்தும் வரை ஒவ்வொரு பெறுகை செய்முறைக்குமான கால ரீதியான விபரங்களை விளக்கக்கூடிய பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | மற்றும் கொள்வனவு செய்தல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பு நவம்பர் அல்லது திசெம்பர் ஆரம்பித்தால் பில்பத்திரங்கள் குறுகிய காலத்தில் தீர்க்கும்போது ஏற்படக்கூடிய செய்முறை சார் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடனே ஆகும். பெறுகை செய்முறைகளின் கட்டங்கள் உட்பட கால ரீதியான விபரங்கள் காட்டக்கூடிய பதிவேட்டின் படி அனைத்து பெறுகை அலுவல்களும் 2024 ஜனவரி 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டது எனவும், 2024 வழிகாட்டல் கோவையின் பிரகாரம் 2025 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளின் கட்டங்கள் உட்பட கால ரீதியான விபரங்கள் பதிவேட்டின் படி 2025 ஜனவரி 01 திகதி முதல் அனைத்து பெறுகை அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஆ) | 2021 – 2024 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒட்டுமொத்த பெறுமதி ரூபா 12,893,403 தொகைக்கான 19 பெறுகைகள் தொடர்பாக கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், போதிய எண்ணிக்கையான இருப்பு காணப்படாமை மற்றும் சந்தையின் விலை அதிகரிப்பு காரணமாக குறிப்பிட்ட வழங்குனர்களினால் வழங்கல்கள் மேற்கொள்வதில் இருந்து புறக்கணித்தல் அவதானிக்கப்பட்டது. அதேபோல் இது தொடர்பாக கட்டளை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வரையான செலவுகளை தீர்த்துக்கொள்ள முடியாமல் காணப்பட்ட காரணத்தினால் அந்த செலவு விளைவற்ற செலவொன்றாகியிருந்ததென அவதானிக்கப்பட்டது. | 2021 முதல் 2024 வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பாக வழங்குனர்களினால் ரூபா 100,000 இற்கு மிகையான பெறுகை அலுவல்கள் புறக்கணித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், திணைக்களத்தினால் செயலாற்றுகை பாதுகாப்பு முறி Performance Bond பெற்றுக்கொள்ளல் ரூபா 5 மில்லியனுக்கு மிகையான கோப்புக்களுக்கு மாத்திரம் காணப்படுவதனால் இங்கு ரூபா 5 மில்லியனிற்கு மிகையான கோப்புக்கள் காணப்படவில்லை. அதன் காரணமாக எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய இவ்வாறான நிலைமைகளுக்கு பெறுகைக் குழுச் சபையின் (DPC) அங்கீகாரத்தின் பின்னர் குறிப்பிட்ட வழங்குனர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என | வழங்குனர்களினால் பெறுகைகளுக்குரிய வழங்குதல்களை புறக்கணித்தல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறிவிக்கப்பட்டுள்ளது.

**4.6 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இன் 41 ஆம் இலக்க இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்கள சட்டத்தை இரத்து செய்து புதிய சட்டமொன்று ஆக்குவதற்கு அமைச்சரவை பத்திர இலக்கம் 16/2249/703/093 கொண்ட 2016 நவம்பர் 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும், இந்த சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டமொன்று ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடலோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டமொன்று ஆக்குவதற்கு அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், இதுவரை சட்டத்தை இரத்துச் செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. புதிய சட்டம் ஆக்கும் அலுவல்கள் நீண்ட காலமாக முடிவுறுத்தப்படாமல் காணப்படுவதுடன், அந்த சட்டம் ஆக்கும் அலுவல்களின் கட்டாயத் தேவைப்பாடொன்றென 2023 செப்தம்பர் 15 திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் படி புதிய சட்டம் ஆக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |